





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.3.2024) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 4 சதவீத அகவிலைப்படி உயர்த்தி அறிவித்தமைக்காக தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், தமிழ்நாடு அனைத்து ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநில மையச் சங்கம், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அனைத்துப் பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் (தியோடர்), தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தொழில்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு வேளாண்மை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் கழகம், டாக்டர் ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழக இடைநிலை மற்றும் பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் மன்றம் (தீபம்), தமிழக பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசுத் தேர்வுத்துறை பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆசிரியர் காப்பாளர் சங்கம், தமிழ்நாடு முதுகலை பட்டதாரி தொழிற்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், டாக்டர் இராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் இயக்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### சாலை விபத்தில் – மேற்கு வங்க முதல்வர்

# மம்தா பானர்ஜிக்கு பலத்த காயம்!

## விரைந்து நலம்பெற – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, மார்ச் 16–

மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற சாலை விபத்தொன்றில் பலத்த காயமடைந்தார். இது குறித்து தகவலறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவர் விரைந்து நலம்பெற வேண்டும் என்று சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இது பற்றி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பதிவு வருமாறு:-

**சாலை விபத்தொன்றில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அவர்கள் பலத்த காயமடைந்தார் என்ற தகவலால் அதிர்ச்சியும் ஆழ்ந்த வேதனையும் அடைந்தேன்.**

**இந்தக் கடுமையான கால கட்டத்தில் என்னுடைய கவலைகள் யாவும் அவருடனே இருக்கின்றன. அவர் விரைந்து நலம்பெற வேண்டும் என விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### நற்பெயருக்கு களங்கம் கற்பிக்க முயற்சி!

# எடப்பாடி பழனிசாமி - அண்ணாமலை மீது முதல்வர் அவதூறு வழக்கு!

## சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ளார்!

*சென்னை, மார்ச் 16-*

போதைப் பொருள் தடுப்பில் தமிழ்நாடு அரசு கடும் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், பொய் தகவல்களை பரப்பி வரும் எடப்பாடி பழனிசாமி மற்றும் பா.ஜ.க., மாநிலத் தலைவர் அண்ணாமலை மீது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சார்பில் அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நடவடிக்கைகளால் தமிழ்நாடு போதைப் பொருள் இல்லா மாநிலமாக திகழ்ந்து வருகிறது. ஆனால், இந்த விவகாரத்தில் முதலமைச்சர் மீது அவதூறு பரப்பும் வகையில், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமியும், பா.ஜ.க., மாநிலத் தலைவர் அண்ணாமலையும் செயல்பட்டு வருகின்றனர்.

இதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

பா.ஜ.க., ஆளும் மாநிலங்களில்தான் போதைப் பொருட்கள் புழக்கம் தலைவிரித்தாடுவதாகவும், அம்மாநிலங்களில்தான் போதைப் பொருட்கள்உற்பத்திசெய்யப்பட்டு, நாட்டின் மற்ற மாநிலங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது என்றும் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்நிலையில், போதைப் பொருள் விவகாரத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வரும் முதலமைச்சரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கிலும், அவதூறு பரப்பும் வகையிலும் செயல்பட்டு வரும் எடப்பாடி பழனிசாமி மற்றும் பா.ஜ.க., மாநிலத் தலைவர் அண்ணாமலை மீது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது. சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சென்னை மாநகர குற்றவியல் வழக்கறிஞர் ஜி.தேவராஜன் இந்த அவதூறு வழக்கை தொடர்ந்துள்ளார். இருவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

### 10 ஆண்டு கால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில்

# விவசாயிகள் கடன் தள்ளுபடி விபரத்தை மோடி கூற முடியுமா?

## ராகுல்காந்தி கேள்வி!



*மும்பை, மார்ச் 16-*

ஒன்றிய பா.ஜ.க., அரசின் 10 ஆண்டுகால ஆட்சியில் எவ்வளவு விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து பிரதமர் மோடியால் கூற முடியுமா என்று காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் பாரத் ஜோடா பயணத்தை ராகுல்காந்தி மேற்கொண்டார். அவரது நடைபயணத்தில் தேசியவாத காங்கிரஸ் கட்சி தலைவர் சரத்பவார் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

அப்போது விவசாயிகளை சந்தித்து அவர்களுடன் ராகுல்காந்தி கலந்துரையாடினார். இதன்பின்பு செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் மிகப்பெரிய பிரச்சினைகளாக பணவீக்கம், வேலைவாய்ப்பின்மை, விவசாயிகள் சந்தித்து வரும் பிரச்சினை உள்ளிட்டவை இருப்பதாக கூறினார். ஆனால் இந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்க மோடி அரசு தயாராக இல்லை என்று அவர் குற்றம்சாட்டி னார். விளைப் பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலை வழங்கப் படும், அவர்களின் வருமானம் இரட்டிப்பாக்கப்படும் என்ற பிரதமர் மோடியின் வாக்குறுதிகள் என்னவாயிற்று என்று அவர் வினவினார்.

10 ஆண்டுகால பா.ஜ.க., ஆட்சியில் எவ்வளவு விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டது என்பது குறித்து பிரதமர் மோடியால் கூற முடியுமா என்று ராகுல் காந்தி கேள்வி எழுப்பினார். விவசாயிகளுக்கு ஒரு ரூபாய் கடனை கூட தள்ளுபடி செய்யாதவர்தான் மோடி என்று அவர் விமர்சித்தார். ஆனால், பெரு முதலாளிகளின் 16 லட்சம் கோடி ரூபாய் கடன்கள் மட்டும் தள்ளுபடி செய்யப் பட்டிருப்பதாக ராகுல்காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

கோரிக்கைகளை நிறைவேற்றாததால்தான் டெல்லி ராம்லீலா மைதானத்தில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று ராகுல்காந்தி கூறினார்.

இதனிடையே காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூகவலைத்தளப் பதிவில், விவசாயிகளுக்கு 5 தேர்தல் வாக்குறுதிகளை ராகுல்காந்தி அளித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார். குறைந்தபட்ச ஆதார விலைக்கு சட்ட அங்கீகாரம், இதற்காக நாடாளுமன்றம் மூலம் சிறப்பு சட்டம், சுவாமிநாதன் ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் உள்ளிட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் நிலுவை கடன்களை ஆராய்ந்து தள்ளுபடி செய்ய குழு அமைக்கப் படும், மழை, வெள்ளம், வறட்சி போன்ற பேரிடர் காலங்களில் பாதிக்கப்படும் பயிர்களுக்கு உரிய காலத்திற்குள் வங்கி கணக்குகள் மூலம் நிவாரணத்தொகை உள்ளிட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளதாக ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட் டுள்ளார். விவசாயப் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் கொள்கையில் சீர்திருத்தம், விவசாயத்துக்கு பயன்படுத்தப் படும் உபகரணங்களுக்கு ஜி.எஸ்.டி., வரியிலிருந்து விலக்கு உள்ளிட்ட வாக்குறுதிகளை ராகுல்காந்தி அளித்துள்ளதாக ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

### கழக அயலக அணி சார்பில் – ஆலங்குடி சையது முஸ்தபா தலைமையில்

# குவைத் நாட்டில் முதல்வர் பிறந்தநாள் மாபெரும் குருதிக்கொடை முகாம்!

## சிதம்பரம் ந.தியாகராஜன் - புதுக்கோட்டை பஷீர் அகமது - பத்தமடை சிந்தா பக்கீர் முன்னிலை!

*குவைத், மார்ச் 16 -*

குவைத் நாட்டில் தி.மு. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. பிறந்த நாளை முன்னிட்டு திமுக அயலக அணியின் வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம், குவைத் சார்பாக மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது.

குவைத் நாட்டில் தி. மு.கழக அயலக அணியின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் தி.மு.க., தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை வெகு சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

இந்த ஆண்டு அவரின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் குருதிக்கொடை முகாம் நடைபெற்றது. அமைப்பின் இணைச்செயலாளர் ஆயங்குடி சையது முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இந்த குருதிக்கொடை முகாமிற்கு அயலக அணி குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன், அமைப்பின் செயலாளர் புதுக்கோட்டை பஷீர் அகமது, அமைப்பின் பொருளாளர் பத்தமடை சிந்தா பக்கீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைப்பின் அவைத் தலைவர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா வரவேற்புரை நிகழ்த்தினார்.

அமைப்பின் துணைச் செயலாளர் முத்துப்பேட்டை ம.சபரி வாசன், மகளிர் அணி செயலாளர் கோவை டி.கே.சரண்யா தேவி, மகளிர் அணி துணைச் செயலாளர் தஞ்சை சாந்தி பாலசுப்ரமணியன் மற்றும் குவைத் வாழ் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தளபதியாரின் ஆட்சியின் சிறப்பு அம்சங்களை கூறி வாழ்த்துரை வழங்கினர்.

தளபதியாரின் ஆட்சியில் மகளிர் நலன், சமூக நீதி, தொழில் வளர்ச்சி போன்றவற்றின் முன்னேற்றம் பற்றி எடுத்துரைத்தனர்.

மேலும் இந்நிகழ்வில் ஒரத்தநாடு, பாப்பா தியாகராஜன், முனசந்தை, சிக்கந்தர் சேகரை, வே. செல்லதுரை, விழுப்புரம் ஜஹாங்கீர், தக்கலை ஜோசப் பெர்லின், உளுந்தூர்பேட்டை சு.வெங்கடேசன், புதுகை மு.சையது முகமது கனி, பரங்கிப் பேட்டை மு.நஸ்ருதீன், மேட்டுவிளை ஐ.ஜாணுவாஸ், தானியம்பாடி சே. அசரப்பள்ளி, நாகப்பட்டினம் .புகழரசன், ராமநாதபுரம் .நாகேந்திரன், பெரம்பலூர் சதக்கத்துல்லா, தஞ்சை .சாத் அன்வர், பத்தமடை .காட்டுப்பாவா, மதுரை கோகுல் ராஜா, ஆத்தூர் ஜான் பாஷா திருக்கோவிலூர் பொன்முடி, அனைகாடு தாமஸ் தேவா சகாயம், மருதூர் எம். பிரேம்குமார், கரமக்குடி அ.ஜாபர் சாதிக் பேராவூரணி ரபீக், கன்னியாகுமரி ஜோசப் எடிசன், திருவிட தூர் ஏ. எஸ்.முகமது ரபிக், குடந்தை தியாகராஜன், காட்டூர் சோ ஆறுமுகம், வேளாண் புதுக்குடி ஜியாவுதீன்,

திருவாரூர் கார்த்திகேயன், குளத்தூர் கணேசன், சேத்துப்பட்டு கணேசன், நீடாமங்கலம் சதாம் உசேன், பெரம்பலூர் முகமது ரபிக், பரங்கிப்பேட்டை முகமது உசேன், கொள்ளிடம் காவேரி செல்வம், திட்டச்சேரி சாகுல் ஹமீது தஞ்சை செந்தில் ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில் முத்தாய்ப்பாக கழக உணர்வாளர்கள் மட்டுமின்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி கட்சிகளான விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், மனிதநேய ஜனநாயக கட்சி நிர்வாகிகள் பலரும் இதில் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கினர்.

இதில் ஒரு சிறப்பாக அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு தொண்டர் கலந்து கொண்டு தமிழகத்தை காத்து நிற்கும் காவல் தெய்வமான தளபதியின் பிறந்தநாளுக்கு நானும் குருதி தானம் செய்கிறேன் என முன்வந்து குருதிக்கொடை அளித்தது அங்கு பெரும் நெகிழ்வை உண்டாக்கியது.

இந்த நிகழ்வில் புலம் பெயர் தமிழர் திருநாளில் புலம்பெயர் சாதனைத் தமிழர்களை கௌரவிக்கும் வகையில் குவைத் நாட்டின் அயலக தி.மு.க. மகளிர் அணி செயலாளர் கோவை டி.கே.சரண்யா தேவிக்கு "கணியன் பூங்குன்றனார்" விருது வழங்கி சிறப்பித்திருந்தனர்.

அதை கௌரவிக்கும் விதமாக இந்நிகழ்வில் அவருக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வின் இறுதியாக அமைப்பின் துணை பொருளாளர் புதுவை அ.அறிவுமணி நன்றி கூறினார்.

### திருச்சி மாவட்டம் – திருவெறும்பூர் துவாக்குடி

# அரசு கலைக் கல்லூரியில் 5 வகுப்பறைகள் - கழிப்பறை கட்டும் பணி!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்!

*திருச்சி, மார்ச் 16-*

தமிழக அரசின் 2023-2024ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கையின் வாயிலாக பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தொகுதி துவாக்குடி அரசு கலைக் கல்லூரியில் 5 வகுப்பறைகள் மற்றும் 1 கழிப்பறைத் 25.09.2023ன் நிதியின் மூலம் புதிய கட்டுமானத்திற்கான அடிக்கல் நாட்டு விழா திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் தலைமையில் நடைபெற்றது .

கல்லூரியானது 1973-74 ஆம் ஆண்டுகளில் தொடங்கப் பெற்று 3668 மாணவர்களுடன் பல்வேறு துறைகளை கொண்டு இயங்கி வருகின்றது. தற்போது இக்கல்லூரியில் அமைய உள்ள கட்டடமானது தரைத்தளத்தில் 5 வகுப்பறைகள் மற்றும் 1 கழிப்பறைத் சுமார் 5810 சதுர அடி (ஐந்து ஆயிரத்து எட்டு நூற்றி பத்து ) அளவில் கட்டப்பட உள்ளது. இப்பணியானது 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட இருக்கிறது.

இந்நிகழ்வில் துவாக்குடி நகர் மன்ற தலைவர் காயாம்பு ,கல்லூரியின் முதல்வர் ரோஸ்மேரி, கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .



முதலமைச்சர் கழக தலைவரின் மகத்தான திட்டத்தில் ஒன்றான ”கலைஞர் மகளிர் உரிமைத் தொகை” திட்டத்தை இழிவுபடுத்தி பேசிய பா.ஜ.க. நிர்வாகி நடிகை குஷ்புவின் பேச்சுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி தலைமையில் மகளிர் அணி அமைப்பாளர்கள் கவிதா மோகன்தாஸ்,முத்துலட்சுமி ஏற்பாட்டில் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் நகர பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன்பு குஷ்புவின் உருவ பொம்மையை எரித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்பாட்டத்தில்,நகர செயலாளர் நாட்டான் மாது,நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது,கைம்பெண் நல வாரிய உறுப்பினர் ரேணுகா தேவி,மற்றும் 200 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பி.ஜே.பி. நிர்வாகி குஷ்புவை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர்.

### கடலூர் மேற்கு மாவட்டம்

# நெய்வேலி நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி நகரச் செயலாளராக பணியாற்றி வரும் வி.பக்கிரிசாமி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக தான் வகித்து வந்த நகரச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **வீ.குருநாதன்**, (சி - 20, சுரங்க சாலை, வட்டம்-24, நெய்வேலி டவுன்ஷிப், கடலூர் மாவட்டம்.) அவர்கள் நெய்வேலி நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 14.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.




வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி 14.03.2024 அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் இரண்டரை ஆண்டு சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்து, பேசினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தா.முஹம்மது குதுரத்துல்லா, ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திருமதி.செ.கலைமாமணி உட்பட பலர் உள்ளனர்.